பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண். 688 **நாள்: 17.11.2026**

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகளை வட்டார துணை ஆணையாளர்கள் இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகள் மற்றும் தூய்மைப் பணிகளை வட்டார துணை ஆணையாளர்கள் இன்று (17.11.2026) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

வடக்கு வட்டார துணை ஆணையாளர் திருமதி ஸ்வேதா சுமன், இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, மணலி மண்டலம், வார்டு-18க்குட்பட்ட மணலி, ஈ.வெ.ரா. சாலையில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூய்மைப் பணிகள் மற்றும் வீடு வீடாகச் சென்று குப்பைகளைத் தரம் பிரித்து சேகரிக்கும் பணியினையும், வார்டு-20க்குட்பட்ட மணலி, காமராஜர் சாலையில் உள்ள இலவச ஒப்பனை அறை, காமராஜர் சாலையில் கட்டிட மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் கொட்டப்படும் இடம், திருவொற்றியூர் மண்டலம், வார்டு-4க்குட்பட்ட இராமநாதபுரம், 1ஆவது தெருவில் உள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையம், வார்டு-10க்குட்பட்ட அன்னை சிவகாமி நகர், 10ஆவது தெருவில் அம்மா உணவகத்திற்கு உணவு தயாரித்து வழங்கப்படும் சமையல் கூடத்தின் கட்டுமானப் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு செய்து நடைபெற்று வரும் பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு. எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, அண்ணாநகர் மண்டலம், வார்டு-103க்குட்பட்ட அண்ணா டவர் பூங்காவில் பசுமைப் பரப்பை அதிகரிக்கும் வகையில் மரக்கன்றுகள் நடும் பணி, பூங்காவில் உள்ள பொதுக் கழிப்பறையின் மேம்பாட்டுப் பணி, வார்டு-101க்குட்பட்ட ஷெனாய் நகர் பகுதியில் சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்று வரும் நூலகக் கட்டடக் கட்டுமானப் பணி, கஜலட்சுமி காலனியில் குப்பைகள் சேகரிக்கப்படும் இடம் ஆகியவற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு. அ.தாப் ரசூல், இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, சோழிங்கநல்லூர் மண்டலம், வார்டு-192க்குட்பட்ட நீலாங்கரை சென்னை நடுநிலைப்பள்ளியில் காமராஜர் காலை உணவுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உணவின் தரம் குறித்தும், பள்ளியில் நடைபெற்று வரும் கூடுதல் கட்டடக் கட்டுமானப் பணி, நீலாங்கரை கடற்கரையில் உள்ள பொதுக்கழிப்பிடம் மற்றும் மேற்கொள்ளப்பட்டு வரும் தூய்மைப் பணி, கபாலீஸ்வரர் நகர், 5ஆவது குறுக்குத் தெருவில் வீடுகள் தோறும் சென்று குப்பைகளைத் தரம் பிரித்து தூய்மைப் பணியாளர்கள் சேகரிக்கும் பணிகளை ஆய்வு செய்து கழிப்பிடத்தைத் தூய்மையாக பராமரித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,

பெருநகர சென்னை மாநகராட்சி